**இலங்கை வங்கி - 2016**

---

இலங்கை வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதனது துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்றுக்கள், விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 வங்கிக்கான விசேட நியதிச்சட்ட ஏற்பாடுகள்**

---

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவினால் முன்னைய நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களின் பிரகாரம் 1992 மே 14 இன் 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அவரின் கட்டளைக்கமைய மேற்குறிப்பிட்ட நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியிலுள்ள ஏற்பாடுகளிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டு 1992 ஏப்ரல் 10 ஆம் திகதிய ஈஏ02/பீசீ/பிபீ/01 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கையின் மூலம் அவரால் அறிவிக்கப்பட்டவாறு வங்கியானது சகல திறைசேரி மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது

அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவது, வங்கியானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

இதுவரையான வங்கியின் பங்குதாரர்களின் நோக்கில் வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகளிற்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் மூலமான அவற்றின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 விலக்களிப்பு

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவினால் முன்னைய நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களின் பிரகாரம் 1992 மே 14 இன் 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அவரின் கட்டளைக்கமைய மேற்குறிப்பிட்ட நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியிலுள்ள ஏற்பாடுகளிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டிருந்தது.

### 2.3 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.3.1 தொகுதியின் நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைப்புக்கான அடிப்படையும்

வங்கியின் ஒருங்கிணைந்த பகுதியாகவுள்ள உள்நாட்டு வங்கிப் பிரிவு, கரை கடந்த வங்கிப் பிரிவு, இஸ்லாமிய வங்கிப் பிரிவு மற்றும் வெளிநாட்டுச் செயற்பாடுகள் என்பவற்றின் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைப்பை வங்கியின் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கியுள்ளன. தொகுதியின் நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்குகின்ற வங்கி, அதன் துணைக் கம்பனிகள் மற்றும் உப கம்பனிகள் என்பவற்றின் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைப்பை உள்ளடக்கியுள்ளன.

ஒவ்வொரு துணைக்கம்பனிகளிலும் உப கம்பனிகளிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறும் வங்கியின் முதலீட்டு நிலைமை பின்வருமாறு உள்ளன.

| கம்பனியின் பெயர் | முதலீட்டு நிலைமை | | கூறப்பட்ட பங்கு மூலதனத்தின் சதவீதமாக உரிமைத்துவம் | |
|---|---|---|---|---|
| | 2016<br>ரூபா மில்லியன் | 2015<br>ரூபா மில்லியன் | 2016 | 2015 |
| **துணைக் கம்பனிகள்** | | | | |
| - **விலைகூறப்பட்ட கம்பனிகள்** | | | | |
| புறபெட்டி டெவலப்மென்ற் பிஎல்சீ | 860 | 860 | 95.55 | 95.55 |
| மேர்ச்சன்ற் பாங் ஒவ் ஸ்ரீலங்கா அன்ட் பைனான்ஸ் பிஎல்சீ | 2,255 | 2,255 | 74.49 | 74.49 |
| - **விலைகூறப்படாத கம்பனிகள்** | | | | |
| பீஓசி மனேஜ்மென்ட் அன்ட் சப்போட் சேவிசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1 | 1 | 100.00 | 100.00 |
| பீஓசி புறபெட்டி டெவலப்மென்ற் அன்ட் மனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட் | 1,010 | 1,010 | 100.00 | 100.00 |
| பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 2.5 | 2.5 | 100.00 | 100.00 |
| ஹொட்டேல்ஸ் கொழும்பு (1963) லிமிட்டட் | 101 | 101 | 99.99 | 99.99 |
| பாங் ஒவ் சிலோன் (யூகே) லிமிட்டட் | 2,684 | 2,684 | 100.00 | 100.00 |
| **துணைக் கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடுகள்** | **6,913.5** | **6,913.5** | | |
| கழி - நட்டக்கழிவுக்கான ஏற்பாடு | (700) | (700) | | |
| **துணைக் கம்பனிகளிலுள்ள தேறிய முதலீடுகள்** | **6,213.5** | **6,213.5** | | |
| **உப கம்பனிகள்** | | | | |
| - **விலைகூறப்படாத கம்பனிகள்** | | | | |
| ரான்ஸ்நெஷனல் லங்கா றெகோர்ட்ஸ் சொலுசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 20 | 20 | 24.69 | 24.69 |
| சீபாங் அசற் மனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட் | 31 | 31 | 43.36 | 43.36 |
| சவ்தேர்ன் டெவலப்மென்ட் பைனான்சியல் கம்பனி லிமிட்டட் | 25 | 25 | 41.67 | 41.67 |
| மிரேகா கெபிற்றல் லான்ட் (பிறைவேட்) லிமிட்டட் | - | 750 | - | 40.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| லங்கா செக்கியூரிட்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 42 | 42 | 41.60 | 41.60 |
| **உப கம்பனிகளிலுள்ள மொத்த முதலீடுகள்** | **118** | **868** | | |
| கழி - நட்டக்கழிவுக்கான ஏற்பாடு | (25) | (25) | | |
| **உப கம்பனிகளிலுள்ள தேறிய முதலீடுகள்** | **93** | **843** | | |
| **மொத்த முதலீடுகள்** | **6,306.5** | **7,056.5** | | |

** மிரேகா கெபிடல் லான்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் பங்குகளிலுள்ள முதலீடு 2016 திசெம்பர் 30 இல் ரூபா 3.88 பில்லியன் தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. இக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தாக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தன.

## 2.4 வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### பெறவேண்டிய கடன் மீதான நட்டக்கழிவு

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது சில காரணங்களினால் வங்கியின் நட்டக்கழிவு செயன்முறை ஆக்கபூர்வமானதாக இருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் உண்மைத்தன்மையூடாக பெறப்பட்ட காலம் மற்றும் காசை தீர்மானிப்பதற்கு முறையான பொறிமுறையை கொண்டிராத காசுப்பாய்ச்சல்களை எதிர்வுகூறும் போது காசுப்பாய்ச்சல்களின் முற்கணிப்பை நியாயப்படுத்தத் தவறியமை, எதிர்கால காசுப்பாய்ச்சல்களை ஆதாரப்படுத்துவதற்கு போதியளவு சான்று காணப்படாமை மற்றும் ஈடுவைக்கப்பட்ட கடன்கள் விடயத்தில் எதிர்கால அறவிடும் தன்மையை மதிப்பிடுவதற்கு தவறியிருந்தது. இதற்கு மேலதிகமாக, தவணை கடப்பதற்கான சாத்தியத்தன்மையை தீர்மானிக்கும் போது தனிப்பட்ட முக்கியமான வாடிக்கையாளரின் (ஐஎஸ்எல்) நட்டக்கழிவற்ற கடன் மீதிகளின் மாதாந்த மொத்த ரீதியான (bucket wise) அசைவுகளை முகாமைத்துவம் பயன்படுத்துவதில்லை. மேலும், செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கான அரசாங்கத்தின் இயலுமைத்தன்மையை மதிப்பீடு செய்யாமல் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகள் அரசாங்கத்திற்கு இணைத்துக்கொள்ளப்படுகின்ற நிலைமையில் அவற்றால் நட்டக்கழிவின்மை கருத்திற்கொள்ளப்படுகின்றன.

மேலும், வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் ரூபா 319,952 மில்லியன் தொகை அல்லது 31 சதவீதம் அரசாங்க அதிகாரசபைகள் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளிடமிருந்து பெறவேண்டியவைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேற்படி மீதியில் ரூபா 30,998 மில்லியன் தொகை குறிப்பிடத்தக்க கடன்களாக நியாயமாக இனங்காணப்பட்டிருந்ததுடன் ஏற்பட்ட நட்டங்களின் நோக்கச் சான்றை கொண்டிருந்தது. இக்கடன் மீதிகள் நகர அபிவிருத்தி அதிகாரசபை (யூடிஏ), லங்கா சதொச லிமிட்டட், நெல் சந்தைப்படுத்தல் சபை, அகரபதன பிளான்ரேஷன் லிமிட்டட் மற்றும் இலங்கை கைப்பணிகள் சபை என்பவற்றிடமிருந்து பெறவேண்டியிருந்தன. நெல் சந்தைப்படுத்தல் சபை, அகரபதன பிளான்ரேஷன் லிமிட்டட் மற்றும் இலங்கை கைப்பணிகள் சபை என்பவற்றிடமிருந்து பெறவேண்டிய ரூபா 4,651 மில்லியன் தவிர மேற்படி கடன் மீதிகள் அனைத்தும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி உத்தரவாதங்கள் அல்லது ஏனைய பிணைகள் மூலம் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவத்தின் கருத்துரைகளின் பிரகாரம், 2017 மார்ச்சில் யூடிஏ ஆல் தொடர்ந்து தீர்ப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக அவற்றிலிருந்து நிலுவையாகவுள்ள மூலதனம் ரூபா 4,990 மில்லியனிற்கு குறைக்கப்பட்டது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், தொகுதியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 25,476 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 30,117 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை பதிவுசெய்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,641 மில்லியன் அல்லது 18.2 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது துணைக் கம்பனிகள் நீங்கலான வங்கியின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 25,279 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 31,189 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,910 மில்லியன் அல்லது 23.4 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

2016 ஆம் ஆண்டின் போது ரூபா 21,940 மில்லியனால் அல்லது 19.5 சதவீதத்தால் வட்டி வருமானம் அதிகரித்தமை செயற்பாட்டு இலாபத்தின் முன்னேற்றத்திற்கு பங்களித்த பிரதான காரணமாக இருந்தது. இதற்கு மேலதிகமாக, ஏனைய செயற்பாட்டு வருமானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,130 மில்லியன் தொகையான மிரேகா கபிட்டல் லான்ட் (பிறைவேட்) லிமிட்டட், உபகம்பனியின் பங்குகள் விற்பனையிலிருந்து ஏற்பட்ட இலாபமும் மேற்படி முன்னேற்றத்திற்கு பங்களித்திருந்தது.

2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 24.79 பில்லியன் மொத்தலாபத்தில் இலங்கை அரசாங்கத்திற்கான பங்கிலாபமாக ரூபா 17.35 பில்லியன் தொகை அல்லது 70 சதவீதத்தை வங்கி ஒதுக்கியிருந்த போதிலும் முன்னைய ஆண்டில் பங்கிலாபமாக இலாபத்திலிருந்து ரூபா 6.35 பில்லியன் அல்லது 36 சதவீத்தை மாத்திரம் வங்கி வெளிப்படுத்தியிருந்தது. ஆகையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பங்கிலாப ஒதுக்கீடு ரூபா 11 பில்லியனால் அல்லது 173 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

வங்கியின் வரிக்கு பின்னரான தேறியலாபம் ரூபா 24,791 மில்லியனாக இருந்த போதிலும் முன்னைய ஆண்டின் ரூபா 70,237 மில்லியன் பெறுமதிச் சேர்க்கையுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான வங்கியின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 78,561 மில்லியனாக இருந்தது. இதனால் வங்கியின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 8,324 மில்லியனால் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 இலாபத்தன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கிச் சேவைகளை வழங்குவதன் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 147,554 மில்லியனாக இருந்தமை 16.5 சதவீத வளர்ச்சியொன்றை காட்டியதுடன் 2015 ஆம் ஆண்டின் ரூபா 126,664 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வட்டி வருமானம் 20 சதவீதத்தால் அதிகரித்ததன் விளைவாக இது கருத்திற்கொள்ளக்கூடிய அதிகரிப்பொன்றாக காணப்பட்டது. எவ்வாறாயினும், கால வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பால் அதற்கெதிரான வட்டிச் செலவினங்கள் அதிகரிகரித்ததன் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சேவைக் கிரயம் ரூபா 71,164 மில்லியனாக இருந்தமை 29 சதவீத அதிகரிப்பை காட்டியது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான ரூபா 4,838 மில்லியனுடன் ஒப்பிடுகையில் வங்கியல்லாத வருமானம் ரூபா 6,568 மில்லியனாக இருந்தமை 35.8 சதவீத வளர்ச்சியை காட்டியது. இக் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கான காரணமானது உப கம்பனியின் (மிரேகா கபிட்டல் லான்ட் (பிறைவேட்) லிமிட்டட்) கைதவிர்ப்பிலிருந்து பெறப்பட்ட மூலதன இலாபமாக இருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 7,433 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் விரிவாக்கல் மற்றும் வளர்ச்சி என்பன மீளாய்வாண்டில் 70 சதவீத உயர் பங்கிலாப கொடுப்பனவு விகிதத்தின் விளைவாக 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் போது 14.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஈ) ஊழியர்கள் மற்றும் வெளியிலுள்ள நிதிகளை வழங்குபவர்களிற்கான பெறுமதி ஒதுக்கீடு 2016 ஆம் ஆண்டின் போது முறையே 0.6 சதவீதத்தாலும் 3.6 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் இது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிய அதிகரிப்பாக இருந்தது.

### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கியின் சராசரி உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஏஈ) 2011 ஆம் ஆண்டில் 33.5 சதவீதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டில் 22.2 சதவீதமாக படிப்படியாக குறைவடைந்து மீளாய்வாண்டில் 28.4 சதவீதமாக அதிகரித்திருந்ததனால் 2011 ஆம் ஆண்டிலிருந்து வங்கி மூலதனத்தை முகாமை செய்வதன் மூலம் போதுமான வருமானத்தை அடைவதற்கு வங்கி திருப்திகரமான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. வங்கியின் ஒதுக்கங்கள் படிப்படியாக அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டில் உயர் ஆர்ஓஏஈ பெறுமதியை வங்கி அடைந்திருக்கவில்லை.

(ii) வங்கியின் திரவத்தன்மை விகிதம் மீளாய்வாண்டில் 20 சதவீத ஆகக்குறைந்த தேவைப்பாட்டை மிகவும் அண்மித்திருந்ததுடன் இது 28.2 சதவீதத்திலிருந்து 21.6 சதவீதம் வரை குறைவடைந்ததுடன் கடந்த ஐந்து ஆண்டுகளின் போது அடையப்பட்ட மிகக்குறைந்த விகிதத்திற்கு வந்திருந்தது.

(iii) வங்கியின் மூலதன போதுமை விகிதம் (தட்டு 1+2) 2014 ஆம் ஆண்டில் 13.6 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 12.3 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது.

(iv) வங்கியின் வருமானத்திற்கான கிரய விகிதம் கடந்த ஆறு ஆண்டுகளின் போது 51.1 சதவீதத்திலிருந்து 43.0 சதவீதத்திற்கு படிப்படியாக குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கடன் நிர்வாகம்

### 4.1.1 கடன்களை வழங்குதல்

வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் மற்றும் முற்பணத்தின் மொத்த மீதிகள் ரூபா 1,047,190 மில்லியனாக இருந்ததுடன் இது ரூபா 869,316 மில்லியனான முன்னைய ஆண்டு மீதியுடன் ஒப்பிடும் போது 20 சதவீத அதிகரிப்பாக இருந்தது. வங்கியானது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே 2 சதவீதம் மற்றும் 5 சதவீத மந்தமான வளர்ச்சி விகிதத்தை காட்டிய போதிலும் கடந்த இரண்டு வருடங்களின் போது கடன்கள் மற்றும் முற்பணங்களின் வளர்ச்சி விகிதம் 2015 ஆம் ஆண்டில் 12 சதவீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 20 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளின் போது கடன்கள் மற்றும் முற்பணங்களின் உற்பத்திப்பொருள் ரீதியான விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| கடன் வகை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | சதவீதமாக மீதி | |
|---|---|---|---|---|
| | 2016 | 2015 | 2016 | 2015 |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % | % |
| தவணைக் கடன்கள் | 391,237 | 350,153 | 37 | 40 |
| மேலதிகப்பற்று | 171,518 | 141,974 | 16 | 16 |
| தனிப்பட்ட கடன்கள் | 160,171 | 107,540 | 15 | 12 |
| திட்டங்களின் கீழான கடன்கள் | 81,145 | 50,702 | 8 | 6 |
| வியாபார நிதி | 68,038 | 45,357 | 6 | 5 |
| வீட்டுக் கடன்கள் | 48,852 | 42,804 | 5 | 5 |
| தங்கநகை அடகு | 47,192 | 56,901 | 5 | 7 |
| குத்தகை வாடகை நிலுவை | 47,475 | 47,142 | 5 | 5 |
| பதவியணியினர் கடன்கள் மற்றும் ஏனைய நிலுவைகள் | 31,562 | 26,743 | 3 | 3 |
| | **1,047,190** | **869,316** | | |

மேற்படி தகவல்களின் பிரகாரம், மொத்த நிலுவைகளில் ரூபா 562,755 மில்லியன் தொகை அல்லது 53 சதவீதம் மீளாய்வாண்டிற்கான தவணைக் கடன்கள் மற்றும் மேலதிகப்பற்றுக்களை கொண்டிருந்தது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் திட்டங்களின் கீழுள்ள தனிப்பட்ட கடன்கள், வியாபார நிதி மற்றும் கடன்கள் முறையே 49 சதவீதம், 50 சதவீதம் மற்றும் 60 சதவீதமான குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்களை காட்டியிருந்தன. எவ்வாறாயினும், தங்கநகை அடகு நிலுவைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 56,901 மில்லியனிலிருந்து ரூபா 47,192 மில்லியன் வரை அதாவது 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**4.1.2 வாடிக்கையாளர்களை மதிப்பிடுதல்**

ஈடுவைக்கப்பட்ட பிணைகள் மற்றும் வாடிக்கையாளரின் கடன் தீர்க்கும் தன்மை என்பவற்றை முறையாக மதிப்பீடு செய்யாமல் குறித்த சில கடன்கள் மற்றும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமை தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், கூட்டிணைந்த வாடிக்கையாளர்களிடமிருந்து வணிகத்தின் ஸ்தாபிப்பு தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் சட்டரீதியான ஆவணங்களை பெறுவதன் மூலம் வாடிக்கையாளர் கடன் மதிப்பீட்டை ஆக்கபூர்வமாகவும் காலரீதியாகவும் கண்காணிப்பதை வங்கி மேற்கொண்டிருக்கவில்லை. ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களுடன் தொடர்புடைய சில சந்தர்ப்பங்களில் காப்புறுதிப் பூட்கைகள் பெறப்பட்டு/ முறையாக புதுப்பிக்கப்பட்டு ஒழுங்கான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், முற்பணங்களிற்கான தொடர்புடைய கோவைகள் உரிய ஆவணங்கள் மற்றும் தகவல்களுடன் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

கடன்கள் மற்றும் முற்பணங்களை பதிவுசெய்வதற்காக வங்கி வெவ்வேறு முறைமைகளை பயன்படுத்துகின்ற போதிலும் வெவ்வேறு செயற்பாட்டுத் தளங்களின் கீழ் வாடிக்கையாளர்களிற்கு வழங்கப்பட்ட அனைத்து வசதிகளையும் கையகப்படுத்தும் தன்னியக்க மையப்படுத்திய பொறுப்பு அறிக்கை வங்கியில் காணப்படவில்லை. ஆகையால், ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் முழுமையான கடன் கலவையின் சரியான கூட்டுமொத்த தொகையை உறுதிப்படுத்துவதும் அவ் வாடிக்கையாளர்களை ஆக்கபூர்வமாகவும் சரியாகவும் மதிப்பிடுவதும் சிக்கலானதாகவிருந்தது.

### 4.1.3 செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியானது செயற்பாடற்ற கடன் கணக்கிலிருந்து சொத்துக்கள் கணக்கிற்கு ரூபா 19,966 மில்லியன் தொகையை மாற்றுவதன் மூலம் 2013 ஆம் ஆண்டில் 4.3 சதவீதமாக இருந்த செயற்பாடற்ற கடன் விகிதத்தை 2014 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 3.8 சதவீதத்திற்கு குறைப்பதற்கான இயலுமையைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் செயற்பாடற்ற கடன் விகிதம் 4.3 சதவீதத்திற்கு மீண்டும் ஒரு தடவை அதிகரித்திருந்ததுடன் இது 13.15 சதவீத அதிகரிப்பாக இருந்தது. எவ்வாறாயினும் வங்கியின் செயற்பாடற்ற கடன் விகிதமானது 2015 ஆம் ஆண்டில் 4.47 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 2.98 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமை காரணமாக 2016 ஆம் ஆண்டில் சாதகமான நிலைமையொன்றில் காணப்பட்டது. தங்கநகை அடகு மொத்த முற்பணக் கலவை குறைவடைந்தமையானது இந்த நிலைமைக்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதி | செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2016 | 1,047,190 | 29,786 |
| 2015 | 869,316 | 36,978 |
| 2014 | 777,505 | 28,762 |
| 2013 | 755,385 | 31,754 |
| 2012 | 714,846 | 19,254 |

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட 06 கிளைகளின் செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பிஏ) மீளாய்வாண்டில் உயர் சதவீதங்களை பிரதிபலித்திருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கிளைப் பெயர் | மொத்த முற்பணம் | மொத்த என்பிஏ | மொத்த முற்பணத்தின் சதவீதமாக என்பிஏ |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| அச்சுவேலி | 737,607,225 | 484,517,589 | 65.69 |
| மாவனெல்ல | 2,155,725,522 | 857,364,829 | 39.77 |
| சுன்னாகம் | 1,238,502,480 | 476,372,825 | 38.46 |

| | | | |
|---|---|---|---|
| மீன் சந்தை | 970,880,218 | 320,100,011 | 32.98 |
| பாணந்துறை | 2,111,391,534 | 332,884,112 | 15.76 |
| இஸ்லாமிய வங்கிப் பிரிவு | 2,160,333,140 | 330,257,360 | 15.28 |

(இ) ஒவ்வொரு உற்பத்திப்பொருளின் கீழுள்ள ஆகக்கூடிய பத்து வாடிக்கையாளர்கள் தொடர்பான செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பண மீதிகள் ரூபா 5,116 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது. அம்மீதிகளின் உற்பத்திப்பொருள் ரீதியான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைகள்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான என்பிஏ** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான என்பிஏ** | **முரண் {சாதகம்/ (பாதகம்)}** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **சதவீதம்** |
| கடன்கள் | 3,679,419,339 | 3,669,994,752 | 0.26 |
| மேலதிகப்பறறு | 1,204,476,621 | 994,818,508 | 21.08 |
| கடன் அட்டை | 11,525,217 | 11,495,724 | 0.26 |
| குத்தகை | 221,570,594 | 368,519,812 | (39.88) |
| **மொத்தம்** | **5,116,991,771** | **5,044,828,796** | |

(ஈ) வங்கியின் ஐந்து கிளைகள் அவற்றின் மூலம் வழங்கப்பட்ட மொத்த மேலதிகப்பற்று வசதிகளுக்கெதிராக ஆகக்கூடிய செயற்பாடற்ற சதவீதங்களை பதிவுசெய்திருந்தன. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த மேலதிகப்பற்று மீதி ரூபா 1,992 மில்லியனாக இருந்ததுடன் அத் திகதியிலுள்ளவாறான மொத்தச் செயற்பாடற்றவை கீழே காட்டப்பட்டவாறு 34.93 சதவீதம் தொடக்கம் 99.64 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 1,532 மில்லியனாக இருந்தது.

| **கிளையின் பெயர்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த மேலதிகப்பற்று மீதி** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த செயற்பாடற்ற மேலதிகப்பற்று மீதி** | **மொத்த மேலதிகப்பற்றின் சதவீதமாக என்பி மேலதிகப்பற்று** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | |
| பாணந்துறை | 372,583,525 | 130,160,563 | 34.93 |
| மாவனெல்ல | 138,979,171 | 83,728,716 | 60.25 |
| றீகென்ற் வீதி | 331,361,343 | 239,895,059 | 72.40 |
| மீன் சந்தை பேலியகொடை | 311,273,703 | 243,866,990 | 78.34 |

| | | | |
|---|---|---|---|
| இரண்டாவது கூட்டுறவு (Second Corporate) | 837,322,109 | 834,322,809 | 99.64 |
| | ------------------ | ----------------- | |
| **மொத்தம்** | **1,991,519,851** | **1,531,974,137** | |
| | ========== | ========== | |

(உ) வங்கியின் அட்டை நிலையம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 88,620 கடன் அட்டைகளை வழங்கியிருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறான மொத்த நிலுவை மீதிகள் ரூபா 3,229 மில்லியன் தொகையாகும். அதில் ரூபா 167 மில்லியன் தொகை அல்லது 5.18 சதவீதம் செயற்பாடற்றவையாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. அட்டைகளை பெற்றதிலிருந்து 2016 திசெம்பர் 31 வரை தனியொரு தவணைப்பணத்தையேனும் செலுத்தியிருக்காத அட்டை உடமையாளர்களின் எண்ணிக்கை 94 ஆக காணப்பட்டதுடன் மொத்த நிலுவைத் தொகை ரூபா 3.7 மில்லியனாக இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்ட மூலதனம் மற்றும் வட்டி என்பன முறையே ரூபா 986,488 மற்றும் ரூபா 506,554 ஆக காணப்பட்டன.

(ஊ) 2016 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் குத்தகை வசதிகளாக ரூபா 47,475 மில்லியன் அல்லது 4.5 சதவீதத்தை வங்கி வழங்கியிருந்தது. மொத்தக் குத்தகை வெளிப்படுத்தலில் ரூபா 19,333 மில்லியன் மீதி அல்லது 40 சதவீதம் அரசாங்கம் மற்றும் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளிடமிருந்து (எஸ்ஓஈ) பெறவேண்டியவைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதில் ரூபா 16,455 மில்லியன் தொகை அல்லது 85 சதவீதம் 3,229 குத்தகை வசதிகள் தொடர்பாக நிதி அமைச்சிடமிருந்து பெறவேண்டியவைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. கீழ்க்குறிப்பிடப்பட்ட அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடற்ற நிலுவைகள் 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு குறிப்பிடத்தக்களவு காணப்பட்டன.

| **நிறுவனத்தின் பெயர்** | **வசதிகளின் எண்ணிக்கை** | **குத்தகை வசதியின் பெறுமதி** | **மொத்த என்பிஏ மீதி (மூலதன நிலுவை)** |
|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| நிதி அமைச்சு | 9 | 27,812 | 14 |
| நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு | 7 | 216 | 35 |
| கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் | 43 | 83 | 44 |
| | ---------- | ---------- | ---------- |
| | **59** | **28,111** | **93** |
| | ===== | ====== | ===== |

மேலும், வங்கியின் பின்வரும் 10 கிளைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 402 மில்லியன் கூட்டுமொத்தமான குத்தகை வசதிகளிற்காக உயர் செயற்பாடற்ற முற்பணங்களை பதிவுசெய்திருந்தது.

| கிளையின் பெயர் | மொத்த என்பிஏ |
| --- | --- |
| | ரூபா. மில்லியன் |
| புறக்கோட்டை | 114 |
| யூனியன் பிளேஸ் மேற்தரக் கிளை | 50 |
| கூட்டுறவு உறவுகள் | 49 |
| தெகிவளை மேற்தரக் கிளை | 48 |
| கடுவெல | 34 |
| பேலியகொடை மீன் சந்தை | 29 |
| கண்டி மேற்தரக் கிளை | 24 |
| பொறளை மேற்தரக் கிளை | 19 |
| கிரிபத்கொடை மேற்தரக் கிளை | 18 |
| பாணந்துறை மேற்தரக் கிளை | 17 |
| **மொத்தம்** | **402** |

(எ) மீளாய்வாண்டின் போது ஏலமிடுதல் ஊடாக நீண்டகால நிலுவையாகவுள்ள தங்கநகை அடகுப் பொருட்களின் பெரும் பகுதியை விற்பனை செய்ததன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாடற்ற தங்கநகை அடகு முற்பணங்கள் ரூபா 6.4 பில்லியனிலிருந்து ரூபா 1.1 பில்லியன் வரை குறைவடைந்திருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிலுள்ள தங்கம் ரூபா 17.8 பில்லியனாக இருந்ததுடன் செயற்பாடற்றவைக்கான நிதியேற்பாடு ரூபா 4.47 பில்லியன் தொகையாக இருந்தது.

### 4.1.4 அரசசார்பற்ற நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த மீதி ரூபா 1,047,190 மில்லியனாக இருந்தது. மேற்படி மொத்தக் கடன் வெளிப்படுத்துகையில் ரூபா 727,237 மில்லியன் தொகை அல்லது 69 சதவீதம் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இது ரூபா 235,458 மில்லியன் தொகையான இனங்காணப்பட்ட தனிப்பட்ட குறிப்பிடத்தக்களவு கடன்களை உள்ளடக்கியுள்ளது. மேற்படி மீதியில், ரூபா 42,512 மில்லியன் தொகையானது நட்டங்கள் ஏற்படுவதற்கான நியாயமான சான்றை கொண்டுள்ளது. மாலைதீவு கிளையின் இரண்டு வாடிக்கையாளர்கள் உள்ளடங்கலாக 16 முக்கிய வாடிக்கையாளர்களுடன் தொடர்புடைய ரூபா 6,934.9 மில்லியன் நிலுவை மீதி 100 சதவீதம் நட்டக்கழிவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு 01)

அறவீட்டில் உயர் ஆபத்தை கொண்டுள்ள அரசசார்பற்ற துறையில் கீழ்க்குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களிற்கு குறிப்பிடத்தக்களவு கடன் வசதிகளை வங்கி வழங்கியிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியூட் ஒவ் ரெக்னோலஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) லிமிட்டட் - (எஸ்ஏஜரீஎம்)**

வங்கியின் மாலம்பே கிளையால் சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியூட் ஒவ் ரெக்னோலஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு - (எஸ்ஏஜரீஎம்) குறிப்பிடத்தக்களவு கடன் வழங்கப்பட்டிருந்தது. 2017 யூன் 05 இல் உள்ளவாறான மொத்த வெளிப்படுத்துகை மற்றும் நிலுவை மீதி என்பன முறையே ரூபா 2,809 மில்லியன் மற்றும் ரூபா 2,161 மில்லியனாக இருந்தன.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், எஸ்ஏஐரீஎம் இன் தொழில்சார் பிரிவொன்றை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக ரூபா 600 மில்லியன் நிர்மாணக் கடனை வழங்குவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 யூன் 05 இல் உள்ளவாறு போதனா வைத்தியசாலை, பட்டப்பின்படிப்பு நிறுவனம் மற்றும் பொறியியல் பீடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,820 மில்லியன் தொகையையும் பல்கலைக்கழகம் மற்றும் வைத்தியசாலை இரண்டினதும் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காக ரூபா 925.5 மில்லியன் தொகையையும் வங்கி வழங்கியிருந்தது.

(ஆ) 28/2015 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படக்கூடிய கடனின் ஆகக்கூடிய தொகை வர்த்தக ரீதியான ஆதனத்தின் மொத்த பொறுப்பேற்றல் கிரயத்தின் 60 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வங்கியானது வைத்தியசாலை மற்றும் பல்கலைக்கழகம் என்பவற்றின் ஆதனங்களின் முறையே 87.4 சதவீத மற்றும் 94.81 சதவீத நிச்சயித்த விற்பனைப் பெறுமதியின் மீது கடன்களை வழங்கியிருந்தது.

(இ) வைத்தியசாலை ஆதனத்தின் மீது ரூபா 1,625 மில்லியன் ஈட்டுக் கடன் வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்த ஆதனம் 2012 மார்ச் 13 இலிருந்து ஆரம்பித்து 30 ஆண்டுகள் காலப்பகுதியொன்றிற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து (யூடிஏ) குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட 5 ஏக்கர்கள் மற்றும் 28 பேர்ச்கள் பரப்பளவான குத்தகைக் காணியை கொண்டுள்ளது. யூடிஏ இற்கு செலுத்தப்பட்ட குத்தகை வாடகை ரூபா 130 மில்லியனாக இருந்த போதிலும் வங்கியானது மேற்படி காணியின் நிச்சயித்த விற்பனைப் பெறுமதியை மதிப்பிடும் போது இதை ரூபா 414 மில்லியனாக கருதியிருந்தது.

(ஈ) இந்த நிலைமையில் எஸ்ஏஐரீஎம் 2017 மார்ச் மாதத்திலிருந்து கடன் தவணைகளை செலுத்த முடியாதிருந்ததுடன் செயற்பாடற்றவையாக இக் கடன்களை வகைப்படுத்துவதை தவிர்க்கும் நோக்கில் வங்கியானது 2017 மே 02 ஆம் திகதிய சபை அங்கீகாரத்தின் மீது எஸ்ஏஐரீஎம் இற்கு பின்வரும் வசதிகளை மேலும் வழங்கியிருந்தது.

(i) ஏற்கனவேயுள்ள தவணைக் கடன்களிற்காக 2017 மார்ச் தொடக்கம் செப்தெம்பர் வரையான 7 மாத தயவுக் காலப்பகுதியொன்றை வழங்குதல்.

(ii) வைத்தியசாலை மற்றும் பல்கலைக்கழகத்தின் ஏற்கனவேயுள்ள கடன்களின் பகுதி வட்டி மற்றும் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டை எதிர்கொள்வதற்கு முறையே ரூபா 103 மில்லியன் மற்றும் ரூபா 300 மில்லியன் தவணைக் கடனை வருடாந்தம் 12.5 சதவீத சலுகை விலைவீதத்திலும் எஸ்ஏஐரீஎம் இன் பணிப்பாளர்களின் தனிப்பட்ட உத்தரவாதத்திற்கெதிராக தயவுக் காலப்பகுதியுடனும் வழங்குதல்.

(iii) 2017 பெப்ரவரியில் அறவிடப்பட்ட ரூபா 27.17 மில்லியன் தொகையான கடன் தவணைக்கட்டணங்களை மீள்நிதியிடல்

(உ) மாலபே கிளையினால் வழங்கப்பட்ட கடன்களின் நாற்பத்து ஆறு சதவீதம் எஸ்ஏஐரீஎம் இற்கு வழங்கப்பட்ட கடன்களை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(ஊ) வங்கியின் பொது முகாமையாளர் இலங்கை அரசாங்கத்திற்கு டாக்டர் நேவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை கையளிப்பதற்காகவும் கையேற்பதற்காகவும் முறையான உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு விருப்பத்தை தெரிவித்து 2017 யூலை 17 இல் எஸ்ஏஐரீஎம் மற்றும் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் (எம்ஓஎச்) செயலாளருடன் ஆர்வ வெளிப்படுத்தல்

கடிதமொன்றை கைச்சாத்திட்டிருந்த போதிலும் 2017 செப்தெம்பர் மாத இறுதி வரையிலும் முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**கடுவெல ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**

2016 யூலை மற்றும் திசெம்பர் மாதங்களின் போது வாகனங்களை இறக்குமதி செய்வதற்காகவும் மேற்படி கம்பனியின் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காகவும் ரூபா 1,020 மில்லியன் கூட்டுமொத்தமான வெவ்வேறு வகைக் கடன் வசதிகளை வங்கியின் பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்தது. 2017 செப்தெம்பர் 07 இல் உள்ளவாறான மொத்த வெளிப்படுத்துகை ரூபா 1,216.7 மில்லியனாகும்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 70 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர மேலதிகப்பற்று எல்லையை விஞ்சி முறையான அங்கீகாரங்கள் மற்றும் ஈடுவைக்கப்பட்ட பிணைமுறி என்பன இல்லாமல் வங்கியின் மெற்ரோபொலிற்றன் கிளை ரூபா 136 மில்லியனை மேலதிகப்பற்று வசதிகளாக வழங்கியிருந்தது.

(ஆ) ஒரு தடவையில் 175 வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக ரூபா 400 மில்லியன் கூட்டுமொத்தமான நாணயக் கடித (எல்சீ) வசதிகளை பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது இந்த வசதிகளின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 426 மில்லியனை பயன்படுத்தி 2017 சனவரி 11 தொடக்கம் 2017 யூலை 03 வரையான காலப்பகுதியின் போது 12 தடவைகளில் வாகனங்களை இறக்குமதி செய்திருந்தது. மேலும், வங்கியானது பகுதிக் கொடுப்பனவொன்றையேனும் அறவிடாமல் 175 வாகனங்களுடன் தொடர்புபட்ட அனைத்து ஆவணங்களையும் விடுவித்திருந்தது.

(இ) மேற்குறிப்பிடப்பட்ட வாகனங்களிற்கான சுங்கத் தீர்வைக் கொடுப்பனவிற்காக ரூபா 200 மில்லியன் அடகுக் கடனை பணிப்பாளர் சபை ஆரம்பத்தில் அங்கீகரித்திருந்ததுடன் தொடர்ந்து இக்கடன் தொகை ரூபா 450 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 செப்தெம்பர் 07 இல் உள்ளவாறான ரூபா 1,216.7 மில்லியன் மொத்த வெளிப்படுத்துகையை அறவிடுவதற்கு கிளையில் எந்தவொரு பிணைகளும் காணப்படவில்லை.

### 4.1.5 பதிவழிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்

நிலுவைக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் கடந்த நான்கு ஆண்டுகளின் போது பதிவழிக்கப்பட்ட மூலதனம் மற்றும் வட்டி கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|
| மூலதனம் (ரூபா. மில்லியன்) | 30 | 19 | 34 | 45 |
| வட்டி (ரூபா. மில்லியன்) | 53 | 36 | 61 | 101 |
| பதிவழிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | 2,842 | 456 | 415 | 146 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2016 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூபா 30 மில்லியனானதுடன் இது வங்கியின் 2,842 வாடிக்கையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேற்படி நிலுவையுடன் தொடர்புடைய வட்டி ரூபா 53 மில்லியனாகும்.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பதிவழிக்கப்பட்ட மூலதனம் மற்றும் பதிவழிக்கப்பட்ட வட்டி என்பன 58 சதவீதம் மற்றும் 47 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

(iii) 2016 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 83 மில்லியன் மொத்த பதிவழிக்கப்பட்ட மூலதனம் மற்றும் வட்டி மீதியில் ரூபா 36 மில்லியன் தொகை அல்லது 43 சதவீதம் இரண்டு தனியார் கம்பனிகளிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்தன.

## 4.2 வங்கியின் சந்தைப் பங்கு

வங்கித் துறையில் சந்தை முன்னோடி நிலையை வங்கி சொந்தமாக்கியிருந்த போதிலும் வங்கியின் தற்போதைய சந்தைப் பங்கானது தற்போதைய வங்கி நிலைமையின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளின் போது அதிகரிக்கும் போக்கு எதனையும் காட்டியிருக்காதமை அவதானிக்கப்பட்டது. கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் வைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட வங்கியின் சந்தைப் பங்கு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### (அ) கடன்கள் மற்றும் முற்பணங்களை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பங்கு

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | **2016** | **2015** | **2014** | **2013** | **2012** |
| வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபா. மில்லியன்) | 1,047,190 | 869,316 | 777,505 | 755,385 | 714,847 |
| சந்தையின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபா. மில்லியன்) | 5,540,751 | 4,715,290 | 3,894,545 | 3,426,558 | 3,149,326 |
| வங்கியின் சந்தைப் பங்கு (%) | 18.90 | 18.40 | 20.00 | 22.00 | 22.70 |

### (ஆ) வைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பங்கு

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | **2016** | **2015** | **2014** | **2013** | **2012** |
| வங்கியின் மொத்த வைப்புக்கள் (ரூபா. மில்லியன்) | 1,258,632 | 1,084,968 | 934,856 | 843,236 | 703,569 |
| சந்தையின் மொத்த வைப்புக்கள் (ரூபா. மில்லியன்) | 6,295,559 | 5,403,131 | 4,686,306 | 4,169,520 | 3,625,374 |
| வங்கியின் சந்தைப் பங்கு (%) | 20.00 | 20.10 | 19.90 | 20.20 | 19.40 |

## 4.3 தரப்படுத்தல்கள்

2016 ஆம் ஆண்டின் வங்கித் துறையில் வங்கியின் தரப்படுத்தல் நிலைமை பின்வருமாறு இருந்தது.

**(i) உலகளாவிய தரப்படுத்தல்**

2016 ஆம் ஆண்டின் போது Fitch தரப்படுத்தல்கள் வங்கியின் International Long-term Issuer Default தரப்படுத்தலை "B+ with negative outlook" ஆக மீள உறுதிப்படுத்திய அதேநேரம் "B1 with negative outlook" ஐ Moody's மீள உறுதிப்படுத்தியது. எவ்வாறாயினும், Fitch தரப்படுத்தல் மற்றும் Moody's முறையே "BB- with stable outlook" மற்றும் "B1 with stable outlook" ஆக மேற்படி தரப்படுத்தல்களை மீள உறுதிப்படுத்தின. ஆகையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 இல் தவணை கடக்கும் ஆபத்து அதிகரிக்கின்றமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

**(ii) உள்ளூர் தரப்படுத்தல்**

2016 ஆம் ஆண்டின் போது பிற்ச் றேரிங்ஸ் லங்கா லிமிட்டட் வங்கியின் தேசிய நீணடகால தரப்படுத்தலை "AA+ (lka) with stable outlook" ஆக மீள உறுதிப்படுத்தியதுடன் ஐசிஆர்ஏ லங்கா லிமிட்டட் கடன் தரத்தின் தரப்படுத்தலை "(SL) AAA with stable outlook" ஆக வழங்கியது.

## 4.4 முகாமைத்துவச் செயற்பாடுகள்

### 4.4.1 யோர்க் வீதிக் கட்டிடம் (York Street Building)

யோர்க் வீதியில் அமைந்துள்ள வங்கிக்குச் சொந்தமான 261,610 சதுர அடி மொத்தப் பரப்பளவையுடைய 6 மாடிக் கட்டிடமொன்றின் 163,890 சதுர அடி பரப்பளவு 2013 ஆம் ஆண்டு வரை மெற்றோபொலிற்றன் கிளை மற்றும் மேல் மாகாண வடக்கு அலுவலகம் என்பவற்றால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மிகுதி தளப் பரப்புக்கள் ஹொட்டேல்ஸ் கொழும்பு (1963) லிமிட்டட்டால் தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது. ஆகையால், கட்டிடத்தின் கருத்திற்கொள்ளக்கூடிய பகுதி அல்லது 60 சதவீதத்திற்கு மேற்பட்டது 2013 இலிருந்து பயனற்றிருக்கின்றது. 2016 ஒக்தோபர் 17 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 3,413 மில்லியனாக இருந்தது. பின்னர், இதனை அரசாங்கம் தந்திரோபாயமற்ற வணிகமாக இனங்கண்டிருந்தது. ஆகையால், தற்போது விடயம் நிதி அமைச்சின் பிபிபி (அரச தனியார் பங்குடமை) பிரிவிற்கு குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும், 2010 இல் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கட்டமைப்பு ரீதியான மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், கட்டமைப்புக் கூறுகளை கொண்டுவரும் அதிகளவு சுமைகளில் கடுமையான வீழ்ச்சி காணப்பட்டதுடன் இந்த கட்டிடம் தொடர்பில் 15 பரிந்துரைகள் முன்மொழியப்பட்டன. எவ்வாறாயினும், வங்கியானது இந்த பரிந்துரைகளை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தற்போதும் எடுத்திருக்கவில்லை.

### 4.4.2 வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடம்

வங்கியானது மெற்றோபொலிற்றன் கிளைச் செயற்பாட்டை தொழிற்படுத்தும் நோக்கத்திற்காக 5 ஆண்டு காலப்பகுதிக்கு வாடகை அடிப்படையில் வைத்தியசாலை வீதி, கொழும்பு 01 இல் கட்டிடம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டிலிருந்து இந்த கட்டிடத்திற்கான வாடகையாக ரூபா 321 மில்லியனை வங்கி செலவிட்டிருந்தது.
இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 செப்தெம்பர் 16 இல் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் கிளையானது 2014 யூலை 21 இல் கட்டிடத்திற்கு இடம்மாற்றப்பட்டிருந்தது. ஆகையால், வங்கியானது 10 மாத காலப்பகுதிக்கு கட்டிடத்தை பயன்படுத்தியிருக்கவில்லை.

(ii) மேற்படி வாடகை உடன்படிக்கையின் கீழ் வங்கியானது முழுக் கட்டிடத்தையும் எடுத்திருந்த போதிலும் தரை, முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்கள் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன. ஆகையால், நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது தளங்கள் 2013 ஆம் ஆண்டிலிருந்து பயனற்றிருந்தன. எவ்வாறாயினும், மிகுதியாகவுள்ள தளங்களை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முகாமைத்துவம் எடுத்திருக்கவில்லை.

(iii) மேற்படி கட்டிடத்தின் கொங்கிறீட் பீம்கள் (Beams), பலகைகள் (slabs) மற்றும் சுவர்கள் வெடித்திருந்ததிலிருந்து கட்டிடமானது நல்ல நிலைமையில் காணப்படவில்லை. இந்தக் கட்டிடத்தின் உரிமையாளர் பல தடவைகள் வெடித்திருந்த பகுதிகளை திருத்தியிருந்தமை மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iv) 1996 அளவில் மத்திய வங்கியின் குண்டுத் தாக்குதலில் இந்தக் கட்டிடம் சிக்கிக்கொண்ட போதிலும் வாடகை உடன்படிக்கையை கைச்சாத்திட்ட போது கட்டமைப்புப் பொறியியலாளரொருவரால் கட்டமைப்பு ரீதியான மதிப்பீடு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4.3 விளம்பர முகவர்களை தெரிவுசெய்தல்

வங்கியின் விளம்பரங்களை வடிவமைத்து தயாரிக்கும் நோக்கங்களிற்காக 3 விளம்பர முகவர்களை வங்கி தெரிவுசெய்திருந்தது. 2015 யூலை 10 இலிருந்து ஆரம்பிக்கும் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்காக கூறுவிலைகள் கோரப்பட்டு இந்த முகவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்படி முகவர்களை தெரிவுசெய்வதற்கு முன்னர், ஒன்பது மாத ஒப்பந்த காலத்திற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஏற்கனவேயுள்ள முகவர்களின் ஒப்பந்தங்கள் வங்கியால் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் முடிவுறுத்தியமைக்கான காரணம் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ii) எதிர்பார்க்கப்பட்ட தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திருந்த 27 சேவை வழங்குநர்களை அவர்களால் தயாரிக்கப்பட்ட திட்டத்தை தரப்படுத்துவதன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (ரீஈசீ) மதிப்பிட்டிருந்த போதிலும் ரீஈசீ ஆல் ஒதுக்கீடு செய்யப்பட்ட புள்ளிகள் மற்றும் நிலைகளை கருத்திற்கொள்ளாமல் நேர்முகப்பரீட்சைகளை நடாத்தி முதலாவது சுற்றில் 27 முகவர்களில் 10 முகவர்களை பணிப்பாளர் சபை தெரிவுசெய்திருந்ததுடன் அவர்களால் வழங்கப்பட்ட விளக்கங்களை மதிப்பீடு செய்து இறுதியாக 3 முகவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

(iii) மேற்படி மூன்று முகவர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் காலாவதியாவதற்கு நான்கு மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையானது 2017 யூலை 9 இலிருந்து ஆரம்பித்து இன்னொரு ஓராண்டு காலப்பகுதிக்கு சேவையை நீடிப்பதற்கு தீர்மானித்திருந்தது.

### 4.4.4 வங்கிக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

வங்கிக்கெதிராக வெளியாட்களினால் நூற்று எண்பத்தேழு (187) சட்ட வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அவற்றில் ஐந்து வாடிக்கையாளர்களால் தொடரப்பட்ட 06 வழக்குகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு சாதகமற்றதாக இனங்காணப்பட்டிருந்தது. ஒரு வழக்கு தொடர்பான தீர்ப்பு வங்கிக்கெதிராக ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது. ஆகையால், அந்த நபரிடமிருந்து ரூபா 50 மில்லியன் மூலதன நிலுவை மற்றும் அதன் மீதான வட்டி என்பவற்றை வங்கியால் அறவிட முடியாதிருந்ததுடன் மிகுதி ஐந்து வழக்குகள் நிலுவையாகவுள்ள கடன்களை அறவிடுதல் மற்றும் உரிமை மாற்றப்பட்ட ஆதனம் தொடர்பானதாகும்.

### 4.4.5 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட 16 ஆதனங்கள் தொடர்பாக சட்டபூர்வமாக இணைக்கப்பட்ட குத்தகை உடன்படிக்கைகளை வங்கி பெறுவதில்லை. 2015 ஆம் ஆண்டிற்கான எனது அறிக்கையில் இது குறிப்பிடப்பட்ட போதிலும் வங்கியானது இதனை சீர்செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், பதினேழு கிளைகள் மற்றும் ஏழு முகாமையாளர்கள் அல்லது பதவியணியினர் இல்லங்கள் அந்த ஆதனங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

(ஆ) டிகானா கிளை ஆதனத்தின் குத்தகை உடன்படிக்கை 2015 ஏப்ரல் 02 இல் காலாவதியாகியிருந்த போதிலும் வங்கியானது 2016 திசெம்பர் 31 வரையிலும் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(இ) காலி மாகாணத்தின் அலுவலகம் மற்றும் ஹக்மான மற்றும் கிறான்ட்பாஸில் அமைந்துள்ள கிளைகள் என்பவற்றிற்குரிய ரூபா 229 மில்லியன் பெறுமதியான மூன்று இறையிலி ஆதனங்களிற்கான உரித்துறுதிகள் வங்கியில் காணப்படவில்லை.

### 4.4.6 மூலதனச் சந்தையிலுள்ள முதலீடுகள்

திரவத்தன்மை, பல்வகைப்படுத்துதல் மற்றும் வருமானமீட்டுதல் போன்ற வங்கியின் முதலீட்டுக் கொள்கையின் நோக்கங்களை வங்கியின் முதலீட்டு நடவடிக்கைகள் உறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், விலைகூறப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் 2015 ஆம் ஆண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 4,936 மில்லியன் மற்றும் ரூபா 4,809 மில்லியன் முதலீட்டின் விளைவாக ரூபா 69.2 மில்லியன் மற்றும் ரூபா 427.3 மில்லியன் நட்டம் வங்கியில் நிலைத்திருந்தது.

### 4.4.7 ஊழியர் நலன்கள்

வங்கியானது ஓய்வூதியர்கள் மற்றும் விதவைகள்/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியர்களின் வைத்திய நிதியத்திற்காக உருவாக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு உரித்துறுதியை கொண்டிருக்கவில்லை.

4.5 செயற்பாட்டுப் பலவீனங்கள்

4.5.1 கரைகடந்த கிளைகளின் செயற்பாடுகள்

(அ) சென்னை கிளை (Chennai Branch)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த வைப்புக் கலவையின் 22 சதவீதம் 3 வாடிக்கையாளர்களின் வைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் 38 சதவீதம் முதன்மையான 10 வாடிக்கையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மேலும், கடன்களின் 25 சதவீதம் முதன்மையான 4 கடன்பட்டோரிற்கு வழங்கப்பட்ட கடன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் 53.5 சதவீதம் முதன்மையான 10 கடன்பட்டோரை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. இந்தக் கிளை மிகவும் வரையறுக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் மீதும் ஒன்றுதிரட்டிய ஆபத்து வெளிப்படுத்துகை மீதும் தங்கியிருப்பதை இது சுட்டிக்காட்டுகின்றது.

(ii) கிளையிலுள்ள ஏரீஎம் இயந்திரம் 2013 இலிருந்து செயற்படும் நிலையில் காணப்படாததுடன் வங்கியானது ஏரீஎம் இயந்திரத்தை திருத்துவதற்கு எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) சீசெல்ஸ் கிளை (Seychelles Branch)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிளையின் மொத்த வைப்பு எஸ்சீஆர் 130 மில்லியனாக இருந்தது. அதில் 53 சதவீதம் 4 வாடிக்கையாளர்களின் வைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் வைப்புக்களின் 74 சதவீதம் பத்து வைப்பாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதேநேரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எஸ்சீஆர் 84 மில்லியன் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 46 சதவீதம் நான்கு கடன்பட்டோருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 69 சதவீதம் பத்துக் கடன்பட்டோரிற்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. ஆகையால் மிகவும் வரையறுக்கப்பட்ட வைப்பாளர்கள் மீதும் உயர் திரவத்தன்மை ஆபத்திற்கான வெளிப்படுத்துகை மீதும் கிளை அதிகளவில் தங்கியிருப்பதை சுட்டிக்காட்டுகின்றது.

(ii) 2012 செப்தெம்பர் 12 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், வங்கியானது கீசெல்ஸ் அரசாங்கம் மற்றும் சீசெல்ஸ் அபிவிருத்தி வங்கிக்கு ஐ.அ.டொலர் 10 மில்லியன் கடன் வசதியை ஒதுக்கீடு செய்வதற்கு இணங்கியிருந்தது; (இது தொடர்பில் இலங்கை வங்கியுடன் கூட்டிணைகின்ற அரச வங்கிகளில் ஒன்று). எவ்வாறாயினும், வங்கியானது 2017 பெப்ரவரி 17 வரையிலும் குறிப்பிடப்பட்ட தீர்மானத்தை அமுல்ப்படுத்தியிருக்கவில்லை.

(iii) சீசெல்ஸிலுள்ள சந்தைக்கு ஒன்பது அரச மற்றும் தனியார் துறை வங்கிகள், இரண்டு பிரதான காப்புறுதிக் கம்பனிகள், அபிவிருத்தி வங்கியொன்று மற்றும் ஏனைய வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் என்பன அவர்களின் உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு தற்போது காணப்படுகின்றன. கிளையில் ஏரீஎம் வசதிகள் மற்றும் அதன் வாடிக்கையாளர்களின் அவசர கடன் தேவைகளை எதிர்கொள்ளும்

வகையில் கட்டாய மூலதனம் என்பன காணப்படாதமை காரணமாக 2 சதவீத சந்தைப் பங்கை மாத்திரமே வங்கியால் அடைய முடிந்திருந்தது.

(இ) பங்களூர் கிளையை திறப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் போது மேலதிக மூலதனம் இடப்பட்டிருந்த போதிலும் புதிய கிளையை ஸ்தாபிப்பதற்கான அங்கீகாரம் இந்தியாவின் நிதி அமைச்சால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5.2 வங்கியின் ஐரீ சுற்றாடல் (IT Environment)

வங்கியின் தகவல் தொழில்நுட்ப சுற்றாடல் மீது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வங்கி வியாபாரம், தங்கநகை அடகு, உள்ளூர் வங்கி சிமாட் பணவனுப்பல்கள் (Inter Banking Smart Remit), தளம் 24 (Base 24), ஸ்கைலீஸ் (Skylease), சீஜரீஎஸ் (CITS) மற்றும் ஐசீபீஎஸ் (ICBS) ஆகிய முறைமைகளுடன் தொடர்புடைய பொருத்தமான பயன்படுத்துனர் முடிவுறுத்தல் காணப்படவில்லை.

(ஆ) தகவல் பாதுகாப்பு கொள்கைக் கைநூல் (பதிப்பு 2.0) 2011 திசெம்பரிலிருந்து வங்கியால் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக தகவல் முறைமைகள் தொடர்பில் பின்பற்றப்படுவதற்கு வேண்டப்பட்டிருந்த நிறுவனத்தின் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆர்வமுடைய தரப்பினர்களிற்கு விழிப்புணர்வூட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கியானது பேமேற் (Paymate) முறைமையின் பராமரிப்பு மற்றும் சேவையை உறுதிப்படுத்துவதற்கு வழங்குநருடன் பராமரிப்பு உடன்படிக்கையை புதுப்பித்திருக்கவில்லை. மென்பொருள் பராமரிப்பு உடன்படிக்கை காணப்படாதமை பேமேற் பிரயோகத்தை (Paymate application) பராமரித்தல் மற்றும் மேம்படுத்தும் போது சிக்கல்களையும் தாமதங்களையும் விளைவிக்கலாம்.

### 4.5.3 வெளிப்படையான முறையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் குருகொட கிளையின் உதவி முகாமையாளர் (Bodyline) ஏரீஎம் இலிருந்து ரூபா 1 மில்லியனை மோசடியாக எடுத்திருந்த போதிலும் இந்த உத்தியோகத்தரிற்கு எதிராக கருத்துள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கண்டி 2 ஆவது நகரக் கிளையின் கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் 2015 மார்ச் 6 மற்றும் 25 ஆகிய இரண்டு நாட்களினுள் மூன்று தடவைகளில் ஏரீஎம் இலிருந்து ரூபா 11.19 மில்லியன் தொகையை மோசடியாக எடுத்திருந்த போதிலும் இதில் ஈடுபட்ட உத்தியோகத்தர் முறைமையில் காணப்படக்கூடிய காசு மீதியினை மோசடியாக மாற்றியிருந்ததால் இந்தக் காசுப் பற்றாக்குறை 2016 சனவரி 20 வரை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) வைக்கல் கிளையின் முகாமையாளர் கிளையின் காசுப் பாதுகாப்பகத்தை வெட்டி பாதுகாப்பகத்திலிருந்து ரூபா 40 மில்லியனை மோசடியாக எடுத்திருந்தார். இதன் விளைவாக ரூபா 42.4 மில்லியன் தொகை வங்கிக்கு நட்டமாக இருந்தது. இதற்கு மேலதிகமாக, மேற்படி முகாமையாளர் பின்வரும் மோசடிகளிலும் ஈடுபட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(i) போலித் தங்க நகைக்கெதிராக வாடிக்கையாளரொருவரிற்கு ரூபா 500,000 வழங்கியமை

(ii) குத்தகை வசதிகளின் மீதியை அறவிடாமல் இரண்டு வாகனங்களின் முழுமையான உரிமைத்துவத்தை மோசடியாக அகற்றியமை. வாகனங்களை விடுவித்த திகதியிலுள்ள மொத்தக் குத்தகை வசதி மற்றும் நிலுவையாகவுள்ள மீதி என்பன முறையே ரூபா 7.1 மில்லியன் மற்றும் ரூபா 6 மில்லியனாகும்.

(iii) நான்கு வாடிக்கையாளர்களின் கணக்குகளிலிருந்து அவர்களின் கணக்குகளை தவறாக பயன்படுத்தி ரூபா 4.9 மில்லியன் தொகை பெறப்பட்டமை.

(iv) ரூபா 5 மில்லியன் மற்றும் ரூபா 6.2 மில்லியன் கடன் வசதியை உயர்மட்ட முகாமைத்துவத்தால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 4.5 மில்லியனிற்குப் பதிலாகவும் கணக்குடமையாளரின் அங்கீகாரமின்றி இன்னொரு வாடிக்கையாளரிற்கு சொந்தமான ரூபா 7 மில்லியன் வைப்பை விஞ்சி ஈடுவைத்தமைக்கு எதிராகவும் இரண்டு வாடிக்கையாளர்களிற்கு வழங்கியமை.

*முகாமைத்துவத்தின் கருத்துரைகளின் பிரகாரம், உரிய முகாமையாளர் பிணையில் எடுக்கப்பட்டு சீஐடி புலனாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நட்டத்தைக் குறைப்பதற்கு காப்புறுதிக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், உள்ளக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தீர்மானம் நிலுவையாக உள்ளது.*

(ஈ) பேமடுவ கிளையின் முகாமையாளர் அவரிற்கு வழங்கப்பட்ட அதிகார எல்லையை விஞ்சியும் உரிய உயர் அதிகாரிகளிடமிருந்தான முன் அல்லது மேவுகை அங்கீகாரமின்றியும் ஏறத்தாழ ரூபா 9.25 மில்லியன் தற்காலிக மேலதிகப்பற்று வசதிகளை வழங்கியிருந்தார். 90/99 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையை மீறி உரிய நடைமுறைக் கணக்கு உடமையாளர்களிடமிருந்து உடந்தையாகவும் தூண்டுதலாகவும் உள்ள பதவியணி உத்தியோகத்தரால் பெறப்பட்ட கையொப்பமிடப்பட்ட வெற்றுக் காசோலைகளை பயன்படுத்தி அவர்களின் கணக்குகளிலிருந்து பணத்தை மீள எடுப்பதற்கு அவர்களிற்குத் தெரியாமலும் அத்தகைய உத்தியோகத்தர் இன்றியும் இந்த வசதிகள் 5 நடைமுறைக் கணக்கு உடமையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(உ) பட்டபொல கிளையின் முகாமையாளர் மேற்படி வாடிக்கையாளர்களிடமிருந்து எடுக்கப்பட்ட ரூபா 26 மில்லியன் தொகையான காசோலைகளுடன் அவர்களின் கணக்குகளை விஞ்சி பணத்தை மீளப்பெறுவதன் மூலம் வாடிக்கையாளர்களின் நடைமுறைக் கணக்குகளிலிருந்து காசை மேசடியாக எடுத்திருந்தார்.

**4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 சனவரி 20 இல் கொள்ளைக்காரக் கும்பலொன்று மெதகம கிளையினுள் உள்நுழைந்திருந்ததுடன் தன்னியக்க ரெலர் இயந்திரத்திலிருந்து (ஏரீஎம்) ரூபா 5.8 மில்லியன் காசை எடுத்துச் சென்றிருந்தது. மேலும், கொள்ளைக்காரர்கள் சீசீரீவீ கமராவின் டிவீஆர் (DVR) மற்றும் ஐசீபீஎஸ் (ICBS) வலையமைப்பின் றவுட்டர் (Router) மற்றும் மொடெம் (Modem) என்பவற்றையும் எடுத்துச் சென்றிருந்தனர்.

கொள்ளைக்காரர்களிடமிருந்து ரூபா 4.8 மில்லியனை மாத்திரம் பொலிஸாரால் கண்டுபிடிக்க முடிந்திருந்தது. இந்த நட்டம் சார்பில் காப்புறுதிக் கோரிக்கை இன்னமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொறலஸ்கமுவ கிளையின் சேமிப்புக் கணக்கிற்கெதிராக வழங்கப்பட்ட 3 ஏரீஎம் வரவு அட்டைகளைப் பயன்படுத்தி நபரொருவரால் ரூபா 1.6 மில்லியன் தொகை மோசடியாக மீளப்பெறப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் ரூபா 998,000 காப்புறுதிக் கோரிக்கை மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆகஸ்ட் 24 இல் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள கிளையில் ரூபா 99,813 கூட்டுத்தொகையான மூன்று மோசடியான விற்பனைத் தள (Point of Sale) (பிஓஎஸ்) இயந்திரக் கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றிருந்தது. நாட்டிற்கு வெளியே கவுன்ட் பெல்ற் (Count Felt) அட்டையை பயன்படுத்தி மேற்படி கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் வங்கியானது இந்த நிகழ்விற்கான ஹக்கேர்ஸை (hackers) இனங்கண்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பெறுகைத் திட்டம்

வங்கியின் பெறுகைக் கைநூலின் 4.2.1(அ) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வங்கியால் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் வங்கியின் தலைவரிற்கு வழங்கப்பட்ட எனது விபரமான அறிக்கைகள் மூலம் வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கடன் நிர்வாகம் | - வாடிக்கையாளர்களின் மீள்கொடுப்பனவு இயலுமையை மதிப்பிடாமை<br>- உயர் செயற்பாடற்ற முற்பண விகிதம் மற்றும் பதிவளிக்கப்பட்ட கடன்கள் காணப்படுதல் |
| (ஆ) ஏரீஎம் மீதான கட்டுப்பாடுகள் | - ஏரீஎம் நிர்வாகம் மீதான பாதுகாப்பு போதாமை மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் காணப்படாமை |
| (இ) தகவல் தொழில்நுட்பம் | - ஐரீ முறைமைகளின் பிரயோகங்கள் மீதான கட்டுப்பாடுகள், இரகசியக் குறியீடுகள் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் போதாமை |

பின்னிணைப்பு 01

| பெயர் | வசதிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|
| ---------- | ------------------ | ----------------- | -------------------- |
| | | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| சின்ரெசி லிமிட்டட் | 11 | 1,064.6 | 1,724.5 |
| ஹார்கோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 79 | 210.1 | 216.8 |
| திரு. என். எஸ். அமரசேகர | 1 | 224.9 | 224.9 |
| அம்பாறை எகபட்ட கோவி சமித்திய | 11 | 178.1 | 181.2 |
| பிசினஸ் போம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 6 | 108.8 | 109.7 |
| குணத்திலக கென்ஸ்ரக்சன்ஸ் | 3 | 229.9 | 634.5 |
| தொழியதூ இன்வஸ்ற்மென்ற்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1 | 749.2 | 786.4 |
| எம்விகே மல்டிவ்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1 | 354.0 | 374.7 |
| ரிஸ்ரார் அப்பரெல் எக்ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 75 | 296.8 | 680.7 |
| கிறியேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 5 | 226.4 | 278.2 |
| சீ சேவிசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1 | 106.9 | 174.9 |
| திரு. எஸ். எஸ் குரூஸ் | 1 | 100.5 | 106.4 |
| பெலவத்த சுகர் இன்டஸ்ரீஸ் பிஎல்சீ | 1 | 150.0 | 170.8 |
| ஸ்ரான்டட் ரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் | 36 | 260.9 | 493.5 |
| திரு. ஐ. சபீக் | மாலே (Male) கிளை | 102.4 | 157.5 |
| திரு. ஜஎன்வி தொழியதூ | மாலே (Male) கிளை | 443.7 | 620.7 |
| | | --------- | ---------- |
| **மொத்தம்** | | **4,807.2** | **6,934.9** |
| | | ===== | ===== |